# திருவருகைக்காலம் 2ம் ஞாயிறு

2020-12-06

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம் 40: 1-5, 9-11,
திருப்பாடல் 85: 8-9. 10-11. 12-13,
திருத்தூதர் பேதுரு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 3: 8-14,
மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 1: 1-8

## திருப்பலி முன்னுரை:

இன்றைய திருப்பலியில் மனம்மாற்றம் பெற்று நற்செய்தியாக மாறி வாழ்ந்திட வந்துள்ள இறைமக்களே உங்களை அன்புடன் வரவேற்கிறோம். இன்று திருவருகைக் காலம் இரண்டாம் ஞாயிறு. நாம் மனம் மாறி புதிய வாழ்வைக் கண்டடையவேண்டுமென்று பொறுமையோடு காத்திருக்கும் நம் அன்புத் தந்தையின் திருப்பாதத்தில் ஒன்று கூடியுள்ளோம்.

அன்பின் ஊற்று நம் தந்தை இறைவன். அவர் நம்மீது கொண்டிருக்கும் பாசமும் கரிசனையும் எல்லைகளைக் கடந்தது. ஆயனைப்போல் தம் மந்தையை அவர் மேய்ப்பார்: ஆட்டுக்குட்டிகளைத் தம் கையால் ஒன்று சேர்ப்பார்: அவற்றைத் தம் தோளில் தூக்கிச் சுமப்பார்: சினையாடுகளைக் கவனத்துடன் நடத்திச் செல்வார். ஆண்டவர் தம் வாக்குறுதியை நிறைவேற்றக் காலந்தாழ்த்துவதாகச் சிலர் கருதுகின்றனர். ஆனால், அவர் அவ்வாறு காலந்தாழ்த்துவதில்லை. மாறாக, உங்களுக்காகப் பொறுமையோடிக்கிறார். யாரும் அழிந்து போகாமல், எல்லாரும் மனம் மாறவேண்டுமென விரும்புகிறார். என்னும் வார்த்தைகள் அவருடைய இதய அன்பை நமக்கு எடுத்துக் கூறுகின்றன. தந்தை இறைவனின் இந்த அன்பை நாம் நம்மிலே தக்கவைத்துக் கொள்ள நமக்கு மனமாற்றம் அவசியமாகின்றது. எனவே நம் சொந்த வாழ்வின் மனமாற்றத்திற்கான வழிகளைக் கண்டடைந்து, நம்மை ஆன்மீகத்திலும் , அருள் வாழ்விலும் புதுப்பித்துக் கொண்டு, ஆண்டவர் மகிழ்வோடும், விருப்போடும் நம்மில் வந்து தங்க நம்மைத் தயார்படுத்த நம்மை அர்ப்பணித்துச் செபிப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.
பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**மாட்சி மிகுந்தவராம் இறைவா,**
எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவரும் ஆண்டவராம் இறைவன் நீர் உரைப்பதைக் கவனமுடன் கேட்டு, நீர் அவர்களை மாசுமறுவற்றவர்களாய், நல்லுறவு கொண்டவர்களாய்க் காணும் வகையில் முழுமுயற்சி செய்து, உமது உன்னத சாட்சிகளாகவும், பணியாளர்களாகவும் வாழும் மனப் பக்குவத்தை அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நல்லாயனாகிய இறைவா!**
இத்திருவருகைக் காலத்தில் எம் பங்கு மக்கள் அனைவரும், இறையன்பு, பிறரன்பு இவற்றில் நாளும் வளர்ந்து கிறிஸ்துவுக்கு ஏற்ற சாட்சிகளாக திகழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**எங்கள் வாழ்வின் நிறைவாகிய இறைவா!**
வரும் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவின் முன் தயாரிப்புகளை நாங்கள் வெறும், வெற்று வெளி அடையளங்களை மையப்படுத்தி வாழாமல் ஆன்மீகத் தயாரிப்புகளில் எங்களைப் புதுப்பித்துக் கொண்டு, உம் பிறப்பு ஏழைகளுக்கு நற்செய்தியாக அமைந்தது போல நாங்களும் நற்செய்தியின் தூதுவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நிறை வாழ்வை வாக்களிக்கும் தந்தையே!**
உம்முடைய பிள்ளைகளாகிய நாங்கள், எம் சொந்த வாழ்வின் மனமாற்றத்திற்கான வழிகளைக் கண்டடைந்து, எம்மை ஆன்மீகத்திலும் , அருள் வாழ்விலும் புதுப்பித்துக் கொண்டு, நீர் மகிழ்வோடும், விருப்போடும் எம்மில் வந்து தங்க எம்மைத் தயார்படுத்த வேண்டிய ஆற்றலை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கருணைக் கடலாகிய எம் இறைவா!**
பல்வேறு சூழ்நிலைகளால் புலம் பெயர்ந்து வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் அனைவர் மீதும் மனமிரங்கி, அவர்களின் கண்ணீரைத் துடைத்து அவர்கள் நிரந்தர வசிப்பிடம் பெற்று அமைதியோடும், பாதுகாப்போடும், மகிழ்ச்சியோடும் வாழ அருள் கூர்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்பின் இறைவா,**
யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக சிறப்பாக மன்றாடுகிறோம். அவர்கள் தாங்கள் செய்த பாவங்களினால் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருந்தாலும் அவர்கள் வேதனை குறைந்து உம் தெய்வீக விருந்தில் பங்குபெற அவர்களை ஆசிர்வதித்து உம்மிடம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**எங்களை உம் அன்பின் சிறகுகளில் காத்து வரும் அன்பு தந்தையே இறைவா!**
தொற்று நோயினால் மரித்த இறைப்பணியாளர்கள் அனைவரையும் உம் பாதம் சமர்ப்பிக்கிறோம். நோயில் போராடும் அனைவரையும் நலமாக்கி உம் பணிசிறக்க அருள் புரியும். யாரும் நினையாத உத்தரிக்கும் தலத்தில் உள்ள ஆன்மாக்களுக்காக மன்றாடுகிறோம். அவர்களை விரைவில் உமது இல்லத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அன்புடன் உம்மை மன்றாடுகிறோம்.